පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 222

ආයතනයේ නම : පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභා ගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 222

நிறுவனத்தின் பெயர்: தொல்லியல் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரயச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 222

Name of the Institution: Department of Archaeology

Submission of observations of Hon. Minster in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee in public Accounts in terms of Standing Order No. 119 (4)

| **கலந்தாலோசிக்கப்பட்ட முக்கிய விடயங்கள்** | **பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் (பி.க.அ) கணக்குக் கொடுக்கும் அலுவலர் (க.அ) விடயங்களை விளக்குதல்.**<br><br>**நிறைவேற்றுக் குழுவின் கண்காணிப்பு பரிந்துரை** |
|---|---|
| 01. தொல்பொருட் திணைக்களத்தில் நிறைவேற்றுத் தரத்தில் வெற்றிடங்கள் காணப்படுவது தொடர்பில் அவதானிக்கப்பட்டது. அதன்போது 27 உதவிப் பணிப்பாளர்களை நியமிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அப்பதவிகள் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்தே வெற்றிடங்கள் காணப்படுவதை நிறைவேற்றுக்குழு அவதானித்தது. | நிறைவேற்றுத் தரத்திலான (SL-1) ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் இல Sc(FR) 248 /2016 இனைக் கொண்ட வழக்கு காரணமாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியாமை காரணமாக இவ்வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆதன் இறுதி தீர்ப்பானது 2024.07.17 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவை ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகத்தன் இல.PMO/RRPCM/2025/decision மற்றும் 2025.04.02 கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் தயாரிக்கப்பட்டு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வரையறுக்கப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையில் போட்டிப் பரீட்சை நடத்தி சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள SLIDA நிறுவனத்துடன் ஒன்றிணைந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **02. தொல்பொருட் திணைக்கள சட்ட அலுவலர் பதவி வெற்றிடமாகக் காணப்படல்** | ஆட்சேர்ப்பு தொடர்பான அழைப்பு அறிக்கை 2024.12.27 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2025.04.25 நேர்முகப் பரீட்சை நடைபெற்று அதன் பெறுபேறுகள் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.<br><br>அதன்படி 2025.08.11 ஆம் திகதியிலிருந்த செயற்படும்படி அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இப்பதவிக்கு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் அதனைப் பொறுப்பேற்கவில்லை. அடுத்த அலுவலரை நியமிக்க அரச சேவைகய் ஆணைக்குழவிற்கு கோரப்பட்டபோதிலும் |

| | |
|---|---|
| | அனுமதி கிடைக்கவில்லை. அதன்படி பதில் கடமைபுரியும் அடிப்படையில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சட்ட அலுவலர் ஒருவர் நியமிக்கப்ட்டுள்ளார். |

| | |
|---|---|
| **03. தொல்பொருட்களை வர்த்தமானிப்படுத்தலும் பாதுகாத்தலும்** | **வர்த்தமானிப்படுத்தல்**<br><br>• தொல்பொருள் வர்த்தமானிப்படுத்தல் பணிகளை வேகப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்பந்தப்பட்ட 20 நினைவுச்சின்னங்கள் மற்றும் 2 காவலரண்கள் தொடர்பான தகவல்களை பிரதேச செயலாளர் மட்டத்தில் வர்த்தமானிப்படுத்தும் பணிகள் நடைபெறுகிறது.<br>• இதன்படி நாடுமுழுவதும் 139 காவலரண்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் புதிய புதிதாக வெளியிடப்படுவதற்கு 117 காவலரண்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டு 07 காவலரண்கள் வெளியிடப்பட்டதுடன், 2024.12.31 ஆம் திகதிக்கு 2960 காவலரண்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.<br>• இதுவரை வெளியிடப்பட்ட தொல்பொருள் காவலரண்களின் விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.<br><br>**வெளியிடப்பட்ட காவலரண்களின் தொகை** |

| தொ. | மாவட்டம் | தொகை |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | **இல.** | | |
| | | 01. | அனுராதபுரம் | 29 |
| | | 02 | பொலன்னறுவை | 10 |
| | | 03 | கேகாலை | 09 |
| | | 04 | இரத்தினபுரி | 07 |
| | | 05 | வவுனியா | 01 |
| | | 06 | முல்லைத்தீவு | 02 |
| | | 07 | யுாழ்ப்பாணம் | 04 |
| | | 08 | அமானராகலை | 07 |
| | | 09 | பதுளை | 01 |
| | | 10 | கொழும்பு | 02 |
| | | 11 | களுத்தறை | 01 |
| | | 12 | அம்பாறை | 04 |
| | | 13 | திருகோணமலை | 12 |
| | | 14 | புத்தளம் | 03 |
| | | 15 | குருநாகலை | 18 |
| | | 16 | மாத்தளை | 14 |
| | | 17 | கண்டி | 07 |
| | | 18 | மாத்தறை | 03 |
| | | 19 | ஹம்பாந்தோட்டை | 05 |
| | | | **மொத்தம்** | **139** |

| | |
|---|---|
| | **வெளியிடப்பட்ட காவலரண்களின் தொகை** |

| தொ இல. | மாவட்டம் | தொகை |
|---|---|---|
| 01 | அனுராதபுரம் | 183 |
| 02 | பொலன்னறுவை | 102 |
| 03 | குருநாகலை | 314 |
| 04 | புத்தளம் | 42 |
| 05 | கண்டி | 323 |
| 06 | மாத்தளை | 60 |
| 07 | நுவரெலியா | 86 |
| 08 | கேகாலை | 197 |
| 09 | இரத்தினபுரி | 136 |
| 10 | பதுளை | 145 |
| 11 | மொனராகலை | 137 |
| 12 | அம்பாறை | 354 |
| 13 | திருகொணமலை | 37 |
| 14 | மட்டக்களப்பு | 03 |
| 15 | காலி | 95 |
| 16 | மாத்தறை | 84 |
| 17 | ஹம்பாந்தோட்டை | 83 |
| 18 | கம்பஹா | 185 |
| 19 | களுத்துறை | 64 |
| 20 | கொழும்பு | 109 |
| 21 | யாழ்ப்பாணம் | 63 |
| 22 | வவுனியா | 29 |
| 23 | மன்னார் | 33 |

| | | |
|---|---|---|
| 24 | கிளிநொச்சி | 08 |
| 25 | முல்லைத்தீவு | 88 |
| | **மொத்தம்** | **2960** |

நினைவுத்தூபி மற்றும் காவலரண்களை வர்த்தமானிப்படுத்தும் பணி (இணைப்பு 01 மற்றும் 01-A ) இல் தரப்பட்டுள்ளது.

**பாதுகாத்தல்**

- மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் தொல்பொருள் திணைக்கள பிரதேச உதவிப் பணிப்பாளர்களை தொடர்புபடுத்தி மாவட்ட மட்டத்தில் 2024.06.11 ஆம் திகதியிலிருந்து 2024.07.25 வரையான காலப்பகுதியில் தொல்பொருள் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. எனினும் இனப்பிரச்சினை போன்ற காரணங்களால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் 04 இடங்களுக்கான குழக்களை நியமிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டன. ஏவ்வாறெனினும், எதிர்காலததில் அந்த நான்கு இடங்களிலும் குழுக்களை நியமிப்பதற்குத் தேவையான பணிகள் முன்னெடுக்கப்படும்.

இதுவரை 70 இற்கும் அதிகமான பிரதேச பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 2025 சனவரி மாதத்திலிருந்து திணைக்கள முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் தொல்பொருள் பாதுகாப்பு குழுக்களின் முன்னேற்றம் மற்றும் முன்னெடுப்புகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

- சில இடங்களில் தற்போது சிவில் பாதுகாப்பு அணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சில இடங்கள் தொல்பொருள் பணியிடங்களாக பராமரிக்கப்படுவதுடன் காவலாளிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| | • வலயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் கீழ் இவ்விடங்கள் கண்காணிக்கப்படுவதுடன் தற்போது வர்த்தமானிமயப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நினைவுச்சின்னத்தையும் பாதுகாக்க மேற்குறிப்பிட்ட முறையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. நினைவுச்சின்னங்கள் காணப்படும் பல இடங்கள் அவற்றை நெருங்குவதற்கான பாதைகள் அற்றவையாக வனாந்தரப் பகுதிகளில் அமைந்துள்ளன.<br>• தனியார் காணிகளில் காணப்படும் நினைவுச்சின்னங்கள் வர்த்தமானிப்படுத்தப்பட்டதன் பின்னர் நடைமுறைகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயலாளரின் 16 ஆம் மாதிரிப்படிவத்தின் கீழ் அனைத்து உரிமையாளரும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அந் நினைவுச் சின்னங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக (சட்ட நிலைமை) அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>• தொல்பொருள் மரபுகளை பாதுகாப்பது தொடர்பில் அரச நிறுவனங்கள், பாடசாலைகளை விழிப்புணர்வு செய்யும் பணிகள் பிரதேச செயலகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை கிராமிய மட்டத்தில் பரவலாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 04.<br>**நாட்டில் காணப்படும் தொல்பொருள் இடங்களை வரைபடமாக்கலும் அவற்றை இணையத் தளத்தில் பதிவேற்றலும்**. | இதுவரை 6536 தொல்பொருள் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் 2723 காணிகள் தொடர்பான விபரங்கள் இணையத் தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இணையத்தளத்தில் பதிவேற்றப்படாத 3813 காணிகளை இணையத்தளத்தில் பதிவேற்றுவது தொடர்பில் செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளதுடன் அது **(இணைப்பு 02)** இல் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைக்காக துறை அறிவு போதுமானதாகும். |

| | |
|---|---|
| | GIS ஒருங்கிணைப்புகளை பெறுவதற்குத் தேவையான GPS கருவிகள் திணைக்களத்தில் காணப்பபடாமையினால் அவற்றை கொள்வனவு செய்தல் மற்றும் அலுவலா்களுக்குத் தேவையான GIS பயிற்சிகளை வழங்குதல் என்பன 2024 இல் மேற்கொள்ளப்பட்டது. 2024 இல் ஒருங்கிணைப்புகளை இணையத்தளத்தில் பதிவேற்றுவதற்கு இதுவே சிக்கலாக அமைந்திருந்துத . எனினும், 2025 ஆம் ஆண்டில் அதனை செயற்படுத்துவதற்காக சகல மாகாணத்திற்கும் ஒவ்வொரு GPS கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| **05.கடற் தொல்பொருட்களை வரைபடமாக்கல்** | இலங்கையின் மூழ்கிய கப்பல்க் தொடர்பான தேசிய தரவுக் களஞ்சியம் National Shipwreck Database of Sri Lanka, izaj தளத்தில் பதிவேற்றப்ட்டுள்ளது. (https://nsd.ccf.gov.lk) மத்திய கலாசார நிதியத்தின் காலி கடற் தொல்பொருள் அலகினால் இத் தரவுக் களஞ்சியம் பராமரிக்கப்படுவதோடு ஆய்வின் மூலம் கண்டறியப்படும் மூழ்கிய கப்பல்கள் மற்றும் கடல்சார் தொல்பொருட் தகவல்கள் தொடர்ந்து இதில் உட்புகுத்தப்படுவதுடன் இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது. |
| 06. **கடற் தொல் பொருட்களை வர்த்தமானிப்படுத்தல்.** | • கடற் தொல்பொருட்கள் என்பது பெரும்பாலும் கடலில் மூழ்கியுள்ள கப்பல்கள் மற்றும் விமானங்கள் என்பவையாகும். இவ்வித தொல்பொருட்கள் தொடர்பாக அதனை நிர்மாணித்த நாடு மற்றும் அது மூழ்கியுள்ள கடற்பரப்பு சொந்தமான நாடு போன்ற இரண்டிற்குமே உரிமை கோர முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை செயற்படுத்த முடியாமை காரணமாக இத் தொல்பொருட்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுதல் மட்டுமே மேற்கொள்ளப்படுவதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுவதில்லை. எனினும், தொல்பொருள் கட்டளைச் சட்டம், பாதுகாப்புச் சட்ட ஒழுங்குகள் போன்ற தேசிய சட்டம் மற்றும் வெளிநாட்டுச் சட்டம் என்பவற்றின் மூலம் இத்தொல்பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றன. |

| | |
|---|---|
| | • அத்துடன் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தினபடி கடற் தொல்பொருட்களை வர்த்தமரிப்படுத்தலுக்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.<br>• இலங்கையின் கடல் வரம்பினைச் சுற்றியும் 113 கடற்படகுகள் மூழ்கியுள்ளதாக சமுத்திர ஆய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்படகுகள் கி.மு. 02 ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதிக்கு உட்பட்டவை. இவை இதுவரை வர்த்தமானிமயப்படுத்தப்படாது விடினும் கீழே காணப்படும் சர்வதேச தேசிய சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகள் மூலம் அவ்விடங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. ஆவையாவன:<br><br>i. 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்திய) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 03 ஆம் உப பந்தி<br><br>ii. ஐக்கிய நாடுகளின் சமுத்திர சட்டம் (UNCLOS-111(1982) இன் மூலம் இலங்கைக்கு சொன்தமான கடற்பரப்பில் மூழ்கியுள்ள கடற் சிதைவுகளுடன் அதிகாரமளிக்கப்ட்டுள்ளது.<br><br>iii. தேசிய அரச சபையின் 1976 இன் 22 ஆம் இலக்க சமுத்திர வலய சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டதன்படி இலங்கையின் சமுத்திரமாக அப்பகுதி காணப்படும்.<br><br>iv. யுனெஸ்கோ சம்மேளனத்தின்படி கடற் தொல்பொருள் இடங்கள் தொடர்பான அறிக்கை<br><br>v. நீரியல் கலாசார மரபுரிமை பாதுகாப்பு யுனெஸ்கோ கட்டளை (2002) (தற்போது இலங்கையில் தாபிக்கப்படாவிடினும் அக்கடளையின்படி செயற்படல்)<br><br>vi. கலாசார சொத்துக்கள் சட்டம் (1981)<br><br>vii. கடற்கரை பாதுகாப்புச் சட்டம் (1981)<br><br>viii. lக்கிய நாடுகள் War Grave சட்டம் இரண்டாம் உலகப் போரில் சிதைவடைந்த கடற்படகுகள் மற்றும் விமானங்கள் தொடர்பில் செயற்படுதல்.<br><br>ix. அமைச்சுக்களுக்கிடையேயான குழக்களின் அமைச்சரவைத் தீர்மானங்கள் |

| | |
|---|---|
| | x. நாரா நிறுவன சட்டம்<br><br>xi. தேசிய பாதுகாப்புச் சட்டம்<br><br>xii. வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் (கடல்)<br><br>இதன்படி ஆமற்குறித்த தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்கள் மூலம் இலங்கை அரசிற்குச் சொந்தமான கடற்பரப்பில் கடலுக்கடியில் கடற்கரையில் காணப்படும் நீரியல் தொல்பொருட்கள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. |
| **07. இணையத்தளத்தில் உட்புகுத்தப்பட்ட கடற் தொல்பொருள் இடங்கள் தொடர்பான நழைவுப் பாதைகளைக் குறிப்பிடல்** | இது சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவேண்டிய பணியாகும்.**அதற்காக வேலை திட்டத்தை உருவாக்க சில கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.** |
| 09.<br><br>**தொல்பொருள் தேசிய கொள்கையை திருத்தம் செய்தல்** | தொல்பொருள் தேசிய கொள்கையினை திருத்தம் செய்வது தொடர்பாக தயாரிக்கப்பட்ட பணி நிர்ணய TOR 2025.02.24 ஆம் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தேசிய கொள்கைத் திருத்தம் தொடர்பாக இதற்கு முன்னர் அமைச்சு மட்டத்தில் நியமிக்கப்பட்ட குழு அங்கத்தவர்களுக்குப் பதில் பத்து பேர் அடங்கிய குழுவொன்று பரிந்துரைக்கப்பட்டு 2025.01.27 ஆம் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>• அமைச்சரவைப் பத்திரமானது 2025.10.17 ஆம் திகதியன்று அமைச்சினால் அமைச்சரவை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. |
| **10. நீர் மூழ்குதலுக்கான காப்புறுதியை வழங்கல்** | இலங்கையில் நீர்மூழ்கலுக்கான காப்புறுதியினை எந்தவொரு நிறுவனமும் வழங்கவில்லை. நீர் மூழ்கிகளுக்கான காப்புறுதியனை தயாரிப்பதற்கான பணிகள் தற்போது செயற்பட்டு வருகின்றன. முத்திய கலாசார நிதியத்தின் காலி கடந் தொல்பொருள் அலகில் கடமையாற்றும் நீர்மூழ்கிகளுக்கான காப்புறுதியினைத் தயார் |

| | |
|---|---|
| | செய்வதற்காநன அடிப்படை பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. ஆவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் நீர்மூழ்கிகளுக்கான காப்புறுதி தொடர்பான தகவல்கள் கூடிய விரைவில் தொல்பொருட் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 11. தீர்ப்பு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தொல்பொருள் ஆலோசனைச் சபை மற்றும் ஏனைய தொல்பொருள் தொடர்பான நிறுவனங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சபைகள் குழுக்கள் இடையே முறையான தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறை ஒன்று இன்மை தொடர்பாக 2023.05.24 ஆம் திகதிய அரச கணக்குகள் தொடர்பான நிறைவேற்றுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதோடு அந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் நிறைவேற்றுக் குழுவினால் வினவப்பட்டது. | தொல்பொருட் திணைக்களம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம், தேசிய சுவடிகள் திணைக்களம் போன்ற தொல்பொருள் தொடர்பான நிறுவனங்களில் தற்போது சபைகள்/ குழுக்கள் செயற்படுகின்றன. இந்த சபைக் குழுக்கள் என்பன நிறுவனத் தலைவர் தமது கடமைகள் தொடர்பில் ஆலோசனைகளை வேண்டி நிற்கும்போது அவற்றை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டவை ஆகும். இந்த சபை/ குழுக்களை ஒருங்கிணைந்த பொறிமுறை ஒன்றினுள் கொண்டுவந்து, தொல்பொருள் தரவுகள்,தகவல்கள் தொடர்பாக செயற்படுவது குறித்து தற்போது அமைச்சுடன் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **12. பரிந்துரைக்கப்பட்ட உலக மரபுரிமைகள் தொடர்பாக அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல்.** | • உலக மரபுரிமைகளைப் பெயரிடும்போது ஒரு வருடத்திற்கு ஒரு இடத்தினை மட்டுமே பெயரிட முடியும். ஏனைய இடங்கள் தொடர்பாக ஆராய்ந்து, யோசனைகளை முன்வைக்க முடியுமென்பதோடு அதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆக்குழுவானது யோசனைகளை முன்வைக்கும்.<br><br>• தற்காலிக பட்டியலில் (Tentative List)உள்ளடக்கப்பட்ட யோசனைகளை ஆராய்வதற்கு 22 அங்கத்தவர்கள் அடங்கிய குழுவொன்று உள்ளதுடன், யுனெஸ்கோவின் IUCN/ICOMOS நிறுவனத்தினால் அவ் யோசனைகள் கவனத்திற் கொள்ளப்படும்.<br><br>• அக்குழுவினால் கலாசார மரபுரிமைகளுக்காக 06 பிரமாணங்களின் கீழ் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுவதோடு, இயற்கை மரபுரிமைகள் 04 பிரமாணங்களின் கீழ் கவனத்திற் கொள்ளப்படும். இந்த பிரமாணங்களில் ஒன்று அல்லது பல |

| | |
|---|---|
| | அடங்குகின்றனவா என மதிப்பீடு செய்யப்படும்.<br><br>• குறித்த நிபுணத்துவ குழுவினால் அப்பிரமாணங்கள் பொருந்துவதாக மதிப்பிடப்பட்டு அதற்கு பரந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டு இணக்கம் காணப்படின்,07 அங்கத்தவர்கள் அடங்கிய உலக மரபுரிமை குழுவிற்கு அந்த யோசனைகள் முன்வைக்கப்படும். |

| | |
|---|---|
| | • அந்தக் குழுவினால் அவை உலக மரபுரிமைகளாக உள்ளடக்கப்பட்டு, உலக மரபுரிமைகளாக பெயரிடப்படுவதற்கும், உள்ளடக்கப்படுவதற்கு குறைபாடுகள் காணப்படின் அவற்றை குறிப்பிடல், தள்ளிப்போடல், நிராகரித்தல் என்பன மேற்கொள்ளப்படும். இந்த செயற்பாடானது திணைக்களம் அமைச்சு என்பவற்றின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் நடைபெறும் நீண்டகால பணி என்பதனால் அது தொடர்பில் தலையிட முடியாது.<br><br>• உலக மரபுரிமைக் குழுவினால் பட்டியலில் உள்ளடக்கப்படுமிடத்து அதன்பின் அவை தொடர்பான தகவல்கள் 196 அங்கத்துவ நாடுகளை அறிவுறுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.<br><br>• இயற்கை உலக மரபுரிமைகள் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் உள்ள யுனெஸ்கோ ஆனது இலங்கை தேசிய ஆணைக்குழுவின் மூலம் உலக மரபுரிமை நிலையத்திற்கு முன்வைக்கும்.<br><br>• இந்த உலக மரபுரிமை இடங்களுக்கான பெயர்குறித்தலானது பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ள முடியுமென்பதோடு குறித்த பரிமாணங்களின்படி தயாரிக்கப்பட்ட யோசனைகள் மேற்குறித்த நடைமுறை வாயிலாக உலக மரபுரிமை குழவின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்படும். |

| | |
|---|---|
| | • இந்த யோசனைகள் ICOMOS, IUCN மற்றும் ICCROM ஆகிய நிறுவனங்களின் பரிந்துரைகளின்படி செயற்பாட்டிற்கு விடப்படும்.<br><br>• மேலும், இலங்கையில் தற்போதுள்ள உலக மரபுரிமை இடங்களுக்கு மேலதிகமாக மேலும் மரபுரிமை இடங்களை பெயர் குறித்தல் வேண்டுமெனும் யோசனைக்கு இணங்க புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் இப்பணிகளை ஒருங்கிணைக்கவும் செயற்படுத்துவதற்குமாக பேராசிரியர் காமினி விஜேசூரிய அவர்கள் நியமிக்கப்பட்டார். இதன்படி இவ்விடயம் தொடர்பாக பல கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், உலக மரபுரிமை இடங்களாக உத்தேசிக்கப்படவேண்டிய கீழ் வரும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.<br><br>i. அனுராதபுரம் புனித நகரத்தின் தொடர்ச்சியாக மிகிந்தலையை அண்டிய உலக மரபுரிமைகள்<br><br>ii. இலங்கையின் நீர்ப்பாசன தொழில்நுட்பம்<br><br>iii. இலங்கையின் பௌத்த தியானமண்டப கட்டடக் கலை மரபுரிமைகள்<br><br>iv. தேயிலைப் பயிர்ச்செய்கையின் கைத்தொழில் மரபுரிமை மற்றும் பூகோள அமைப்பு<br><br>v. தென்பகுதியின் சுவரோவியங்களுடன் கூடிய விகாரைகள்<br><br>vi. ஜெப்ரி பாவாவின் கட்டடக் கலை நிர்மாணம்<br><br>vii. இடைப்பட்ட யுகத்தின் கட்டடக் கலை நிர்மாணம்<br><br>viii. Oratarian Church of Sri Lanka<br><br>மேற்குறிப்பிட்ட துறைகளை உலக மரபுரிமை இடங்களாக பெயர் குறித்தலுக்கான பணிகள் |

| | |
|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் “ இலங்கை பௌத்த தியானமண்டப கட்டடக்கலை மரபுரிமையின் கீழ் அரங்கெலே,மானாகந்த, ரிட்டிகல மற்றும் நாகொல்ல போன்ற இடங்கள் தற்போது தற்காலிகப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• இதுவரை இலங்கையில் கலாசார மரபுரிமைகள் ஆறும் இயற்கை மரபுரிமைகள் இரண்டும் பெயர்குறிக்கப்பட்டதோடு ஐந்து இடங்கள் காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>• **கலாசார மரபுரிமைகள்**<br>i. அனுராதபுரம் புனித நகரம்<br>ii. பொலனறுவை பழைய நகரம்<br>iii. சிகிரியா பழைய நகரம்<br>iv. காலி பழைய நகரம் மற்றும் அதன் மதில் சுவர்<br>v. ரங்கிரி தம்புலு விகாரை<br><br>• **இயற்கை உலக மரபுரிமைகள்**<br>i. சிங்கராஜ வனம்<br>ii. இலங்கையின் மத்திய மலைநாடு<br>iii. ( சிவனொளிபாதம் ஹோட்டன் தென்னை, நகல்ஸ் மலைத்தொடர்) |

| | |
|---|---|
| | • **காத்திருப்புப் பட்டியலுக்கு உள்ளடக்குவதற்கான பெயர்கள்**<br><br>i. சேருவில மங்கல ரஜமஹாவிகாரை<br>ii. மகாவலி ஆற்றின் சேருவிலயிலிருந்து<br>iii. சிவனொளிபாதம் வரையான பாதை<br>iv. ரஜகல தொல்பொருள் காவலரணின்<br>v. புராதன ஆரியகர விகாரை<br>vi. இலங்கையின் தேயிலை கலாசார பூகோள அமைப்பு<br><br>என்பவற்றை உலக மரபுரிமைகளாக வெளிப்படுத்தலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட இடங்கள்<br><br>• இலங்கையின் புராதன பௌத்த தியானமண்டப (ரிட்டிகல/ அரங்கெலே /மானாகந்த)<br>காத்திருப்புப் பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டது.<br>• இலங்கை தேயிலை கைத்தொழில் தொடர்பான பூகோள அமைப்பு- காத்திருப்புப் பட்டியலிலி உள்ளடக்கப்பட்டது.<br>• மிகிந்தலை (அனுராதபுரத்தின் தொடர்ச்சியாக)<br>• 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த ஓவியங்கள் அடங்கிய இடங்கள்<br>• புராதன நீர்ப்பாசன அமைப்பு<br>• வெப்ப மண்டல கட்டடக் கலை<br>• ஒரடோரியன் தேவாலயங்கள் |

| | |
|---|---|
| | • மஹாயான சாயலுடனான ஆரம்ப தொகுதிகள்<br>• வரலாற்றுக்கு முந்திய பாரம்பரிய குகைகள்<br><br>இதுவரை உலக மரபுரிமை காத்திருப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட இலங்கையின் புராதன தியானமண்டப யோசனைகள் தொடர்பாக ரிட்டிகல தொல்பொருள் இடத்தில் காணப்படும் இயற்கை காரணிகளை ஒன்றிணைத்து ரிட்டிகலயை கலப்பு உலக மாபுரிமையாக வெளிப்படுத்துவதற்கான யோசனை தொடர்பான கலந்துரையாடல் கடந்த காலங்களில் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றதோடு அந்த யோசனை IUCN நிறுவனம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து தயார் செய்யப்பட்டது.<br><br>• திணைக்களத்தினாலும் அனுமதிப் பத்திரத்தின் கீழும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் தொடர்பாக அட்டவணை கணனி மற்றும் தரவுக் கோவை இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இதுவரை 120 புதிய அகழ்வுகளின் தகவல்கள் Exel தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டன.<br><br>• அகழ்வின்போது அடையாளம் காணப்பட்ட தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட்டு |

| | |
|---|---|
| | நூதனசாலைக்கோ வேறு நிறுவனத்திற்கோ பொறுப்புக் கொடுப்பதா போன்ற தகவல்கள் அடங்கிய விபரமான ஆவணத்தை அறிமுகப்படுத்த முயற்சிக்கப்ட்டபோதிலும் தொல்பொருள் பதிவு ஆவணத்தை அச்சிடுவதற்கு இரு முறைகள் விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் நேர்மறையான வழங்குநர் ஒருவர் முன்வராததன் காரணமாக இவ்வாவணம் 2024 ஆம் ஆண்டு அச்சிட முடியாமற் போனது.<br><br>ஆவணத்தின் முக்கியத்துவம் காரணமாக 2025 ஆம் ஆண்டிலும் இது தொடர்பாக பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>• இதன்படி 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் தொடர்பாக கையாளப்பட்டு வரும் அறிக்கை (இணைப்பு 03) காட்டப்பட்டுள்ளது.<br><br>• இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வுகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய வருடாந்த அகழ்வுத் திட்ட ஆவணம், அகழ்வு அனுமதிப்பத்திர ஆவணம் என்பன அகழ்வுப் பிரிவின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. |

| | |
|---|---|
| **<u>13. தொல்பொருள் அகழ்வுப் பணிகளை செயற்படுத்தல் மேற்பார்வை பாதுகாப்பு மற்றும் தரவுகளை களஞ்சியப்படுத்தல்.</u>**<br><br>இது தொடர்பில் 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பெறப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நிறைவேற்றுக் குழுவினால் வினவப்பட்டது. | |
| **<u>14. அத்தனகலை படகுப் பாதுகாப்பு</u>** | • அத்தனகலை படகின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு விடயம்சார் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் 08 கட்டங்களினாலான திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டதுடன், அதில் 06 கட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.<br><br>• படகின் முழு நீளம் 59 அடி 11 அங்குலமாக இருப்பதால் 20 அடியைக் கொண்ட மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முதல் பகுதியானது |

| | |
|---|---|
| | களிமண்ணால் செய்யப்பட்டதுடன் அப்பகுதியானது தொல்பொருள் பாதுகாப்பு பிரிவினால் ஒன்பதாகப் பிரிக்கப்பட்டு தற்போது பாதிப்பிற்கு உள்ளாகாத பகுதியினை முதற்பாகத்தில் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 20 அடி பகுதியானது நிபுணத்துவக் குழுவினால் அவதானிப்பு செய்யப்பட உள்ளது. மேலும் மிகுதியாகக் காணப்படும் பழைய மரப் பகுதி உறுதியான மூலப்பொருளினால் மீளவும் பலப்படுத்தப்பட வேண்டியுள்ளதனால் அதற்கு (Consolidation) மாதிரிப் பரிசோதனை ஒன்றும் தொல்பொருள் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.<br><br>(செயற்பாட்டுத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.) **(இணைப்பு 04)** |
| <u>**15. தொல்பொருட்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குப் புதிய தொழில்நுட்ப கருவிகளை உபயோகித்தல்**</u><br><br>இது தொடர்பாக 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றுக்குழு வழங்கிய பரிந்துரையின்படி செயற்திட்டம் ஒன்றினை நிறைவேற்றுக் குழுவிற்கு வழங்காமை தொடர்பில் நிறைவேற்றுக்குழு வினவியது. | தொல்பொருள் மற்றும் அவற்றின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இரசாயன பாதுகாப்பு நடவடிக்கைகளில் இரசாயன பாதுகாப்புப் பிரிவு பலவேறு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதோடு விசேடமாக தொல்பொருள் அகழ்வின்போது கிடைக்கும் தரவுகளின் காலநிர்ணயத்தின் கார்பன் கால நிர்ணயம், வெப்ப ஒளிர்வு கால நிர்ணயம் மற்றும் ழுழஊயுஜ கால நிர்ணய முறைகளை உபயோகித்து வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் அப்பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கையில் அவ்வாறான இரசாயன வசதிகள் இல்லா என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன். |
| **16. வடக்கு கிழக்கு தொல்பொருள் காணிகளைப் பாதுகாத்தல்** | 2024.12.31 ஆம் திகதிக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில் வர்தமானியில் வெளியிடப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் காவலரண்கள் பின்வருமாறு<br><br>வெளியிடப்பட்ட காவலரண்களின் தொகை<br><br><table><tr><th>தொ.இ.</th><th>மாவட்டம்</th><th>தொகை</th></tr></table> |

| | | |
|---|---|---|
| 01 | வவுனியா | 01 |
| 02 | முல்லைத்தீவு | 02 |
| 03 | யாழ்ப்பாணம் | 04 |
| 04 | அம்பாறை | 04 |
| 05 | திருகோணமலை | 12 |
| | **மொத்தம்** | **23** |

வெளியிடப்பட்ட காவலரண்களின் தொகை

| **தொ.இ.** | **மாவட்டம்** | **தொகை** |
|---|---|---|
| 01 | அம்பாறை | 354 |
| 02 | மட்டக்களப்பு | 03 |
| 03 | யாழ்ப்பாணம் | 63 |
| 04 | வவுனியா | 29 |
| 05 | மன்னார் | 33 |
| 06 | கிளிநொச்சி | 08 |
| 07 | முல்லைத்தீவு | 88 |
| 08 | திருகோணமலை | 37 |
| | **மொத்தம்** | **615** |

- முன்னுரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு தொல்பொருள் காணிகள் பாதுகாக்கப்படும்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படும் தொல்பொருள் காணிகள் பாதுகாக்கப்பட்டதன் பின்னர் அப்பகுதிகளிலிருந்து மக்களை அகற்றுவதற்கு தொல்பொருட் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்பதுவே மக்கள் மத்தியில்

| | |
|---|---|
| | காணப்படும் பிரதான சிக்கலாக உள்ளது. இதன் காரணமாக அப்பகுதிகளில் எல்லைக் கற்கள் நடுதல், ஆராய்ச்சி, அகழ்வுகளை மேற்கொள்ளல் அல்லது கற்றல் போன்ற நடவடிக்கைகளில் திணைக்கள அலுவலர்கள் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் பிரதேச மக்கள் அவர்களுக்க இடைஞ்சலை ஏற்படுத்தல், போராட்டங்களில் ஈடுபடல் மூலம் அப்பணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தவதால் பணிகள் தாமதமடைகின்றன. எனினும், இப்பணிகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்ப அமைச்சின் ஒத்துழைப்பு வேண்டி 2024.05.17 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டது. |

……………………………………

**புத்தசாசன, சமய மற்றும் கலாசார**

**அலுவல்கள் அமைச்சின் செயலாளர்**

……………………………………

**தொல்பொருளியல் பணிப்பாளர்**

**தலைமையதிபதி**

**தொல்பொருளியல் திணைக்களம்**

**இணைப்பு 01**

## நினைவுச்சின்னங்களை வர்த்தமானிமயப்படுத்தும் செயன்முறை

- ஆராய்ச்சி திட்டங்களின் கீழோ அல்லது இடப்பரிசோதனையின் கீழோ நினைவுச் சின்னங்களை அடையாளம் காணலும் அறிக்கையிடலும்
- அந் நினைவுச் சின்னங்களை வர்த்தமானியில் வெளியிடத் தேவை எனில் பிரதேச உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் தலைமை அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (ஆய்வு) இடம் சமர்ப்பித்தல்.
- அவ் வறிக்கையினை பரீட்சித்து விடயம்சார் அலுவலரின் கீழ் வர்த்தமானியில் வெளியிடத் தேவையான நினைவுச்சின்ன பட்டியலை தயாரித்தல்.
- வர்த்தமானியில் வெளியிடவுள்ள நினைவுச் சின்னம் தொடர்பாக தொல்பொருள் பணிப்பளர் நாயகத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளல்.
- வர்த்தமானி அறிவித்தலின் சட்டவரைபை தயாரித்தலும் கணனிமயப்படுத்தலும்
- தமிழ் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்தல்
- மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வரைபை சட்ட வரைஞரின் அனுமதிக்கு சமர்ப்பித்தல்.
- அந்த அனுமதி கிடைத்ததன் பின் விடயம் சார் அமைச்சரின் கையொப்பத்திற்குச் சமர்ப்பித்தல்.
- அக் கையொப்பம் கிடைக்கப் பெற்றதும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின்படி எதிர்ப்புகளை வினவல். இந்த அறிவிப்பானது அரச அச்சகத்தின் வர்த்தமானி அறிக்கையின் மூலம் வெளியிடப்படும். எதிர்ப்புகள் காணப்படின் மேலதிக நடவடிக்கைகளுக்காக விடயம் சார் அமைச்சருக்கு சமர்ப்பித்தல்.
- எதிர்ப்புகள் காணப்படவில்லையெனில், சட்டத்தின் 18 ஆம் உறுப்புரையின் பிரகாரம் மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் சட்டவரைபை மும்மொழிகளிலும் தயாரித்து சட்ட வரைஞரின் அனுமதிக்கும் விடயம்சார் மைச்சரின் கையொப்பம் கிடைத்ததும் அரச அச்சகத்திற்கு வழங்கி வர்த்தமானி மூலம் நினைவுச் சின்னம் வெளியிடப்படும்.
- புராதன நினைவுச் சின்னமாக வெளியிடப்படும்போது எதிர்ப்புகளை வினவாது அரசாங்க வர்த்தமானி மூலம் நினைவுச் சின்னம் வெளியிட்டு வைக்கப்படும்.
- சட்டத்தின் 17 ஆம் உறுப்புரையின்படி பாரம்பரிய மற்றும் தொல்பொருள் பெறுமதிமிக்க புராதன மரங்கள் மேற்குறித்த நடைமுறைகளை பின்பற்றி புராதன நினைவுச் சின்னங்களாக வெளியடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**இணைப்பு 02**

**இலங்கையின் தொல்பொருட் காணிகள் அடங்கிய போட்டல் ( GIS இணையத்தள நுழைவு) இற்றைப்படுத்தலுக்குக்கான செயற்பாட்டுத் திட்டம்**

- தொல்பொருள் திணைக்கள ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவில் பூகோள தகவல் அமைப்பு அலகின் மூலம் பேணப்பட்டுவரும் இலங்கையின் தொல்பொருள் சார் இடங்கள் உள்ளடக்கப்பட்ட இணைய போட்டலினை ( GIS இணையத்தள நுழைவு) இற்றைப்படுத்துவதற்கான செயற்பாடாகும்.

- இந்த இணைய போட்டலில் 2017 /18 ஆண்டுகளிலிருந்து 2024 ஜுன் மாதம் வரை 1658 தொல்பொருள் இடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஜுலையிலிருந்து 2024 டிசம்பர் வரை 562 தொல்லியல் சார் இடங்கள் உட்படுத்தப்பட்டு தற்போது 2320 வரையானவை இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

- தொல்பொருட் திணைக்கள பிராந்திய அலுவலகங்களினால் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2723 இடங்களுக்கு மேலதிகமாக உட்படுத்தப்படவேண்டிய 3813 இடங்கள் உள்ளன. இவற்றை உட்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் வகையில் இந்த செயற்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டது.

- இப்பணியினை மேற்கொள்ள மாதத்திற்கு 100 இடங்கள் இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனும் பிரமாணக் குறிப்பு நடைமுறைசாத்தியமற்றது. இதற்கு,இணைய போட்டனினை இற்றைப்படுத்தத் தேவையான தரவுகள் (Database) தயாரிப்பிற்கு அவ்விடங்களின் பூகோள ஒருங்கிணைப்புகள் மற்றும் ஏனைய தரவுப் பண்புகளை (Attributes) வழங்கும் செயற்பாடு இடங்களை அடையாளம் காணல்,ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் உள்ளிட்ட துறைசார் செயற்பாடுகள் போன்றவை இணைந்து காணப்படுவதன் என்பன பிரதான காரணங்களாகும். எனவே, பிராந்திய அலுவலகங்களிலிருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பனவற்றின்போது 100 இடங்கள் என்பது கூடவோ குறையவோ முடியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ii. தொல்லியல் இடங்களின் நிழற்படங்களை இணைய போட்டலில் உட்படுத்தல் (தற்போது உள்ளடக்கிய 2320 இடங்கள்) இந்த இணைய போட்டலில் ஆரம்பத்திலிருந்தே நிழற்படங்கள் பதியப்படவில்லை. இது தொடர்பில் பிராந்திய அலுவலகங்களை அறிவுறுத்தி வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்படும். | " | " | " | " |
| 05. | தொல்லியல் இடங்களின் பெயர்களை தமிழ் மொழிபெயர்ப்பிற்கு அனுப்பலும் அத் தகவல்களை இணையத்தளத்தில் இற்றைப்படுத்தலும். இதுவரை இற்றைப்படுத்தப்பட்ட புதிய இடங்களுக்கான தமிழ்ப் பெயர்களை இடுதல். | எதிர்பார்க்கப்படுகிறது | GIS அலகுக்கு பொறுப்பான அலுவலர் | உதவிப் பணிப்பாளர் (நிலையான சொத்து) | 2025 பெப்ரவரியிலிருந்து |
| 06. | GIS அலகின் தொழில்நுட்ப வளங்களை மேம்படுத்தல்<br><br>அ) பெறுகை நடவடிக்கைகள் நிறைவடைந்த GPS கருவிகளை GIS அலகு கைப்பற்றல்<br><br>ஆ) இந்த அலகிற்கு மடிக்கணனி ஒன்றினை வழங்கல் | 14<br><br>01 | GIS அலகுக்கு பொறுப்பான அலுவலர் | உதவிப் பணிப்பாளர் (நிலையான சொத்து) | 2025 பெப்ரவரி<br><br>2025 மார்ச்-ஜுன் |
| 07 | அலகில் மனிதவளத்தினை மேம்படுத்தல்<br><br>அ) GIS விடயம் சார் பிராந்திய அலுவலர்களுக்கு பூகோள தகவல் அமைப்பு GIS கூறுகள், உலகளாவிய இடங்காட்டி (GPS) தரவுக் கோவைகளைத் தயாரித்தல், GIS மென்பொருள் பயிற்சி வரைபட நிர்மாணம் போன்ற விடயங்களை உள்ளடக்கிய நிகழ்நிலை விரிவுரைகளை GIS இற்குப் பொறுப்பான அலுவலரால் நடத்துதல். | 10 | " | உதவிப் பணிப்பாளர் (நிலையான சொத்து) | 2025 மார்ச்-டிசம்பர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆ) சிகிரியா தொல்பொருள் வளாகத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சிப் பட்டறை<br><br>இ) மேற்குறிப்பிட்ட சகல பணிகளினதும் வசதி மற்றும் வினைத்திறனுக்கு GIS அலகுக்கு அலுவலர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளல். | 20<br>பேருக்கு<br><br>01 | “<br><br>“ | | 2025 ஜுன்-ஜுலை<br><br>2025 மார்ச்சிலிருந்து |

**விசேட குறிப்பு**

- மேலே 03.i பிரிவில் தொல்பொருள் சார் இடங்கள் 75 என குறிப்பிடப்பட்டிருப்பினும் அத்தொகையில் மாற்றம் ஏற்படலாம்.
- இந்த செயல்திட்டத்தை சகல பிராந்திய தொல்பொருள் அலுவலகத்திற்கம் அனுப்ப வேண்டுமென்பதோடு பிராந்திய உதவி பணிப்பாளர்கள் தமது அலுவலக GIS விடயம்சார் அலுவலரை முறையாக அறிவூட்டி பொறுப்பினை அளிக்க வேண்டும்.

**இணைப்பு 03**

**2024 அகழ்வுத் திட்டங்களின் விபரங்களை உள்ளடக்கிய கோவையில் மேற்கோள் காட்டப்பட்ட சுருக்கமான குறிப்பு**

| **தொ. இ.** | **அகழ்வு மேற்கொள்ளப்படும் இடம்** | **அகழ்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தேடல்** | **அகழ்வுப் பணி வெற்றியடைந்தது/ வெற்றியடையவில்லை** | **அகழ்வுப் பணிகள் மேற்கொண்டு நடத்தப் படல் வேண்டுமா** |
|---|---|---|---|---|
| 01 | நாகதீப தொல்லியல் இடத்தின் சிலை மண்டப அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. குறித்த சிலை மண்டப சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டு பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| 02 | ஓவாகிரிய ரஜமஹாவிகாரையின் சிதைவுகள் தூபி மேட்டை நிறுவும் அகழ்வுத் திட்டம் | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. பழைய தூபி வெளிப்படுத்தப்பட்டு பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது |
| 03 | தீகவாபி ஒலுவில் பாதையில் வெள்ளத்தினால் அள்ளுண்டு வெளியாகிய கல் பதிப்பின் பரிசோதனை அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. சகல தகவல்களும் அறிக்கையிடப்பட்டு பாதுகாப்பாக மீண்டும் மூடிவைக்கப்பட்டது |
| 04 | பண்டாரவளை பள்ளியகந்த வரலாற்றுக்கு முற்பட்ட காணியை மீட்கும் அகழ்வுப் பணி | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. அபிவிருத்திப் பணிக்காக உத்தேச காணியை அடையாளம் கண்டு அக் காணியை விடுவிப்பதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 05. | எரவ்வல பாதிப்பை மதிப்பிடுவதற்கான அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | ஆம். மீண்டும் அகழ்வுகளை மேற்கொண்டு அபிவிருத்திப் பணிகளுக்கு விடுவிப்பதற்காக உத்தேச காணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தொடர்பில் ஆராய்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | கொழும்புத் துறைமுக பெட்டன் பேர்க் அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை.அகழ்வுத் தகவல்களின்படி பாதையை அமைக்கும் காணியை விடுவிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. |
| 08 | வனாத்தவில்லு அஷா கனிம பிரித்தெடுத்தல் வேலைத்தள பரிசோதனை அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. | வெற்றியளித்தது | இல்லை. அகழ்வு தகவல்களின்படி பாதையை அமைக்கும் காணியை விடுவிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.. |
| 09. | பொது மலசலகூடத் தொகுதியை அமைப்பதற்கான சேத மதிப்பீட்டு அகழ்வு காலி கோட்டை | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. அகழ்வுத் தகவல்களின்படி மலசலகூடத் தொகுதியை அமைக்கவுள்ள காணிளை விடுவிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. |
| 10 | சீதாவக்க ராஜசிங்க மாளிகை காணப்படும் காணியில் உள்ள ஒல்லாந்து கோட்டையின் அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் சேர்க்கப்படும். | வெற்றியளித்தது | ஆம். கோட்டையின் பாதுகாப்பிற்காக அகழ்வுப் பணிகள் பரவலாக்கப்படல் வேண்டும். ஆகழப்பட்ட பிரிவு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. |
| 11 | மடுவன்வெல தெதரன்கமுவ அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் சேர்க்கப்படும். | வெற்றியளித்தது | இல்லை. பழைய தூபி வெளிப்படுததப்பட்டு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. |
| 12 | புஞ்சி தல்மில்லேவ கிரிமிட்டியாவ இடத்தில் நீதிமன்ற கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றியளித்தது | இல்லை. நீமன்ற கட்டளையின்படி பொதுமக்களின் தேவைப்பாட்டின்படி அகழ்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | ஆலங்குளம பரிசோதனை அகழ்வு | கடைசி அகழ்வு அறிக்கையில் சேர்க்கப்படும். | வெற்றியளித்தது | ஆம் பரிசோதனை தேவைக்காக இப்பிரதேசம் மீள் அகழப்பட வேண்டும். |
| 14 | வெஸ்ஸகிரிய தொல்பொருள் காணியின் தூபி அகழ்வு | இறுதி அகழ்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள து. | வெற்றியளித்தது | இல்லை. பழைய தூபி வெளிப்படுத்தப்பட்டு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. |
| 15 | வலய அலுவலகம் அமைக்க உத்தேசித்த காணியில் பரிசோதனை அகழ்வு | இறுதி அகழ்வு அறிக்கையில் அறிக்கையிடப்பட்டு ள்ளது.வரையறுக்கப் பட்ட தொல்பொருள் அளவு | வெற்றியளித்தது | இல்லை. அகழ்வு இறுதியில் அபிவிருத்தி பணிக்கான காணியை தீர்மானித்து விடுவிக்க உத்தேசித்தல். |
| 17 | எத்துல்கோட்டே சிதைவு மதிப்பீட்டு அகழ்வுத் திட்டம் | கடைசி அகழ்வு அறிக்கையில் அறிக்கையிடப்பட்டு ள்ளது | வெற்றியளித்தது | இல்லை. அகழ்வு இறுதியில் அபிவிருத்திக்கான காணியை தீர்மானித்தல் |

**இணை
ப்பு 4**

**<u>பாதுகாப்பு திட்டம் - அத்தனகல படகு புனரமைப்பு</u>**

| கட்டம் | பணி | பொறுப்பு | காலவரையறை |
|---|---|---|---|
| 01 | தேசிய நூதனசாலை திணைக்களத்திலிருந்து தொல்பொருள் திணைக்கள பிரதான இரசாயனசாலைக்கு கொண்டுவருவதற்கு தேசிய நூதனசாலை திணைக்கத்தின் அனுமதியைப் பெறல் | தொல்பொருள் திணைக்களம் | பணி நிறைவு |
| 02 | தேசிய நூதனசாலை திணைக்களத்திலிருந்து படகின் பகுதிகளை தொல்பொருள் திணைக்கள பிரதான இரசாயனசாலைக்குக் கொண்டுவரல் | தொல்பொருள் திணைக்களம்<br><br>தேசிய நூதனசாலைத் திணைக்களம் | பணி நிறைவு |
| 03 | குழுத் தீர்மானத்தின்படி தொல்பொருள் மாதிரிகள் பாடசாலை உற்பத்தி குழத் தலைவர் திரு காமினி ஜயசிங்கவின் கண்காணிப்பிற்கு உட்படுத்தல் | தொல்பொருள் திணைக்களம் | பணி நிறைவு |
| 04 | முாதிரியை அமைப்பதற்குத் தேவையான தொல்பொருள் அளவுசார் திட்டத்தைப் பெறல் | தொல்பொருள் திணைக்களம் | பணி நிறைவு |
| 05 | ஓப்பீட்டளவில் தொல்பொருளானது பாதுகாப்பு வரையறையை மீறியிருப்பினும் தண்டுடன் கூடிய பகுதிகளுக்கு உறுதியான ஆதாரமொன்றை இடல் | தொல்பொருள் திணைக்களம்<br><br>தேசிய நூதனசாலைத் திணைக்களம் | பணி நிறைவு |
| 06 | மாதிரி உருவை வைத்திருக்க தற்காலிக வீடொன்றை அமைத்தல் (15அடி வரை) | மத்திய கலாசார நிதியம்<br><br>தேசிய மாதிரிகள் பாடசாலை | பணி நிறைவு |
| 07 | மாதிரி உருவை நிர்மாணித்தல் | தேசிய மாதிரி உரு பாடசாலை | ஒரு வருடம் |
| 08 | படகின் பாதுகாப்பப் பகுதிகளை ..ே.பைபகிளாஸ் தளத்தில் வைத்திருத்தல் | தேசிய மாதிரி உரு பாடசாலை<br><br>தொல்பொருள் திணைக்கம்<br><br>தேசிய நூதனசாலைத் திணைக்களம் | ஆவ்வருடத்தில் |